BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# 2021 ஆம் ஆண்டிற்கான கனடா நாட்டின் மிகச்சிறந்த பணியமர்த்துபவர்களாக ப்ராம்ப்டன் நகரை ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனம் அங்கீகாரம் செய்திருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 27, 2021) – 2021 ஆம் ஆண்டின் கனடா நாட்டின் மிகச்சிறந்த பணியமர்த்துபவர்கள் (Canada's Best Employers 2021), எனப்படும் மிக உயர்ந்த 300 பணியமர்த்துபவர்கள் பட்டியலில், ப்ராம்ப்ட்டன் நகரமும் ஒன்று என ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனம் அங்கீகரித்திருக்கிறது.

ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவன பட்டியல் வரிசையில் தொடர்ந்து முன்றாவது வருடமாக நமது நகரம் இடம் பிடித்திருக்கிறது. 300 நகரங்கள் கொண்ட இந்த பட்டியலில், இந்த ஆண்டில் இந்நகரம் இந்த ஆண்டு 58 ஆவது இடத்தைக் பிடித்திருக்கிறது.

கனடா நாட்டின் மிகச்சிறந்த பணியமர்த்துபவர்கள் என பணியாளர்களால் மிகச்சிறப்பாகக் கருதப்படுகின்ற நிறுவனங்களை அடையாளம் காண்பதில் ஆராய்ச்சி செய்கின்ற ஸ்ட்டாடிஸ்ட்டா (Statista) எனும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி நிறுவனத்துடன், ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனமானது, கூட்டு சேர்ந்துள்ளது.

ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனமும் ஸ்ட்டாடிஸ்ட்டா (Statista) நிறுவனமும் சேர்ந்து கனடா நாட்டின் மிகச்சிறந்த பணியமர்த்துபவர்களை தேர்ந்தெடுத்தது; 500 க்கும் அதிகமான எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் இருந்து 8,000 க்கும் அதிமான கனடா நாட்டு பணியாளர்கள் அடங்கிய மிகப்பெரிய மாதிரி ஜனத்தொகையை வைத்து, எதையும் சாராத வகையிலான ஒரு கருத்தாய்வு மூலம் இது செய்யப்பட்டது. இந்த கருத்தாய்வின் மீது நடத்தப்பட்ட மதிப்பாய்வானது, தங்கள் நண்பர்களை மற்றும் உறவினர்களை தாங்கள் வேலை செய்யும் நிறுவனத்திற்கு பரிந்துரைக்க விரும்புகின்ற பணியாளர்கள், தாங்களாகவே செய்த நேரடி மற்றும் மறைமுகமான பரிந்துரையின் அடிப்படையில் செய்யப்பட்டது. பணியாளர் மதிப்பாய்வுகளில் அவரவர் தொழில் நிறுவனங்களில் சாதகமாகவோ அல்லது எதிர்மறையாகவோ தங்களைக் காட்டிக்கொண்ட பிற பணியமர்த்துபவர்களும் இதில் அடங்குவர்.

**விரைவுக் கூற்றுக்கள்**

- நவம்பர் 2019 இல், பணியிட பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள் சேர்த்தலுக்கான யுக்தி மற்றும் ஐந்தாண்டுக்கால பணித்திட்டம் எனும் ஒரு திட்டத்தை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் உருவாக்கியது. இது அனைவரையும் உள்சேர்த்து, ஈடுபடுத்தி மற்றும் வளர்க்கின்ற வகையிலான கலாச்சாரத்தை பேணிக்காப்பதற்கான சந்தப்பங்களை அமைத்துக் கொடுக்கிறது.
- டிசம்பர் மாதத்தில், தனது பணியாளர்கள் மற்றும் குடியிருப்புவாசிகளுக்கான சமத்துவ அலுவலக கட்டிடத்திற்கான அடித்தளம் அமைப்பதாக நகர நிர்வாகம் அறிவித்தது. இந்த சமத்துவ

அலுவலகமானது, பணியிடத்திலும் சமூகத்திலும், இனம், வம்சாவளி, பிறப்பிட மூலம், நிறம், இன மூலம், உடல்ரீதியான இயலாதன்மை, குடியுரிமை, குலம், பாலினம், பாலினரீதியான முறை, ஆண்பால்/பெண்பால் அடையாளம், ஓரின கூட்டுறவு, வயது, திருமண நிலை, குடும்ப அந்தஸ்து, குடியேற்ற அந்தஸ்து, அரசின் பொது உதவித்தொகை பெறும் தன்மை, அரசியல் சார்பு, கல்வியறிவின் மட்டம், மொழி மற்றும்/அல்லது சமூக-பொருளாதார அந்தஸ்து ஆகியவை ஒரு பொருட்டில்லாமல் அனைத்து தடைகளையும் இனம் கண்டு நீக்குவதில் கவனம் செலுத்தும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நகரமானது மிகச் சிறப்பாக நிர்வகிக்கப்படும் நகரமாகும், மற்றும் நமது நிர்வாகப் பனியாளர்கள் நமது நகரத்தை பாதுகாப்பானதாக, நிலைத்து நிற்கவல்லதாக மற்றும் வெற்றிகரமானதாக ஆக்குவதற்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ளனர். நமது நகரத்தை மூன்றாவது முறையாக 'கனடா நாட்டின் மிகச்சிறந்த பணியமர்த்துபவர்கள்' என ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படுவதில் நாம் பெருமை கொள்கிறோம். நமது முன்னாள் மற்றும் இன்னாள் அலுவலர்கள் நம்மை அவர்களின் பணியமர்த்திக் கொள்பவர்களாக கருத, அவர்கள் கொடுக்கும் வாய்ப்பினை நாம் தொடர்ந்து பெற்று வருகிறோம். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் என்பது பல கலவை நகரமாகும்; இந்த நகரத்தில், நாம் சேவையாற்றும் சமூகத்தைப் பிரதிபலிக்கும் வகையில், பன்முகத்தன்மை கொண்ட ஒரு பணிப்படையை நாம் தொடர்ந்து வளர்த்து வருகிறோம். இப்படியான பணியிட பன்முகத்தன்மை மற்றும் அனைத்தையும் உள்சேர்க்கும்தன்மை மற்றும் அதற்கான பணித்திட்டம் மற்றும் சமத்துவ அலுவலகம் போன்ற முனைப்புக்களின் மூலம், அனைத்து தனிநபர்களுக்கும் சமத்துவமான மரியாதை மற்றும் நகரின் பணியாளர்களுக்கு இதமும் இசைவும் கொண்ட சூழலை உறுதி செய்யவே நாங்கள் பணியாற்றி வருகிறோம்..”

*- ஹர்கிரத் சிங், தலைமைப் பொறுப்பு, பெருநிறுவன சேவைகள்; நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அனைவருக்கும் நியாயமானதாகவும் மற்றும் சமமானதாகவும் இருக்கும்படி பணியிடத்தில் உள்ள தடைகளை அகற்ற நகர நிர்வாகம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நமது குடியிருப்புவாசிகளுக்கு சேவை செய்வதில் மிகுந்த ஆர்வமுள்ள நமது ஊழியர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய பணியிட கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டிருக்கிறோம். கனடாவின் சிறந்த பணியமர்த்துபவர்களில் ஒருவராக ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனத்தினால் மீண்டும் அங்கீகரிக்கப்படுவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.”

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1&5, தலைமைப் பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் பணியாளர்களின் காரணமாக, கனடாவின் சிறந்த முதலாளிகளில் ஒருவராக ஃபோர்ப்ஸ் (Forbes) நிறுவனத்தினால் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அங்கீகரிக்கப்படுவது என்பது, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான ஒரு பன்முகத்தன்மை கொண்ட பணிப்படையை ஈர்த்து, வளர்த்து மற்றும் கொண்டாடுகின்ற, நகரத்தின் ஆர்வத்தை எடுத்துக்காட்டுகிறது. எங்கள் ஊழியர்களையும், எங்கள் நிறுவன அமைப்பின் மீதான அவர்களின் நம்பிக்கை மற்றும் அவர்களின் பங்களிப்புகள் ஆகியவற்றை நான் அங்கீகரிக்க விரும்புகிறேன்; ப்ராம்ப்ட்டன் வாசிகளுக்கான நன்முடிவுப்பலன்களை வழங்குவதில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் இருப்பவர்கள், மற்றும் நாங்கள் சேவை செய்யும் பல்வேறு சமூகத்தால் உற்சாகப்படுத்தப்படுபவர்கள், இவர்களேயாவர்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca